5-SEP1981

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 23.

பங்குனி 10, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள்.

*145 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடைபெறாததால், மாநில மேலவை முழு அளவில் அதனுடைய இடங்களைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளதை, தேர்தல் கமிஷன், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுண்டா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளைக் கலந்தாலோசித்து வாக்காளர்களின் வயது வரம்பை 21 லிருந்து 18 ஆகக் குறைத்து தமிழக அரசு சட்டம் இயற்றியுள்ளது என்றும் இதன் அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தல் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கவும், தேர்தல் ஏற்பாடுகள் செய்யவும். ஏறத்தாழ ஆறு மாத காலம் ஆகுமென்றும் எனவே உள்ளாட்சித் தேர்தல்களை 1981 ஆம் ஆண்டு நடத்த இயலுமென்றும், ஆனால் இதை அனைத்து கட்சிகளையும் கலந்து மாநில அரசு முடிவு எடுத்து மேற்கொண்டு செய்தி அனுப்புமென்றும் இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இவ்வரசு தெரிவித்திருக்கிறது.